செ.வெ.எண்:39 நாள்: 24.04.2019

**கரூர் மாவட்டம்**

**134-அரவக்குறிச்சி சட்டமன்றத்தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு நாளன்று தேர்தல் பணியாற்றவுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பணிஒதுக்கீட்டுக்கான கணினி முறை குலுக்கல் - மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் நடத்தினார்**

அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் 22.04.2019 அன்று துவங்கி 29.04.2019 வரை நடைபெறுகிறது. வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யும் நாள் 30.04.2019 செவ்வாய்கிழமையும், வேட்பு மனுக்கள் திரும்பப் பெறும் நாள் 02.05.2019 வியாழக்கிழமையும், தேர்தல் வாக்குப்பதிவு நாள் 19.05.2019 ஞாயிற்றுக்கிழமையும், வாக்கு எண்ணிக்கை 23.05.2019 அன்று வியாழக்கிழமையும் நடைபெறுகிறது என இந்தியத்தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டம் 134-அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் ஆண்கள் 99,052 பெண்கள் 1,06,219 இதர வாக்காளர்கள் 2 மொத்தம் 2,05,273 வாக்காளர்களும் உள்ளனர். 250 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வாக்குச்சாவடி மையத்திலும், ஒரு வாக்குசாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்கள் மூன்று நபர்கள் நியமிக்கப்படுவார்கள். 1,400க்குமேல் வாக்காளர்கள் உள்ள வாக்குச்சாவடி மையங்களில கூடுதலாக ஒரு வாக்குச்சாவடி அலுவலர் மற்றும் இதர அலுவலர்கள் நியமிக்கப்படுவார்கள். அதனடிப்படையில் மொத்தம் உள்ள 250 வாக்குச்சாவடி மையங்களிலும் பணிபுரியவுள்ள 1,218 நபர்களுக்கு கணினி முறையில் குலுக்கல் செய்து பணி ஒதுக்கீடுசெய்யப்படுவதற்கான நிகழ்வு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தேர்தல் பிரிவில் இன்று நடைபெற்றது.

மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் கணினிமுறையில் குலுக்கலை நடத்தினார். அதனடிப்படையில் 1,218 நபர்களுக்கும் தேர்தலுக்கான பணி ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்படவுள்ளது.

28.04.2019 ஞாயிற்றுக்கிழமையன்று பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு மண்டல அலுவலர்களின் மூலம் பள்ளப்பட்டி அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளியில் முதற்கட்ட பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் டி.கே.இராஜசேகரன்.இ.கா.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திருமதி.செல்வசுரபி, அரவக்குறிச்சி தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் உதவி ஆணையர் (கலால்), திருமதி.மு.மீனாட்சி, துணை ஆட்சியர்கள் திரு.கண்ணன், திரு.கணேஷ் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து கரூர் மக்களவைத்தொகுதிக்கான வாக்கு எண்ணும் மையமான தளவாபாளையம் எம்.குமாரசாமி பொறியியல் கல்லூரியில் தேர்ல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப., மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.டி.கே.இராஜசேகரன்.இ.கா.ப., ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**